# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1478/8 - 2007 ජනවාරි 01 වැනි සඳුදා - 2007.01.01

*1478/8 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க மொத்த விற்பனவு வரிச் சட்டம்***

7 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பெறும் 1981 ஆம் ஆண்டின் 69 இலக்க மொத்த விற்பனவு வரிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனாக இலங்கை சனாதிபதி, மகிந்த ராஜபக்ஷ ஆகிய நான் மேற்குறித்த சட்டத்தின் மேற்கூறிய பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு 1993 ஆம் ஆண்டு சனவரி மாதம் 29 ஆந் திகதிய 751/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் அப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு 2001 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதிய 1205/ 27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மூலம் இறுதியாக திருத்தப்பட்டிருந்த போதிலும் அக்கட்டளையை 2006 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி நள்ளிரவு அல்லது 2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் நடைமுறையிலிருக்குமாறு இக்கட்டளை மூலம்*

(1) 1993 சனவரி மாதம் 29 ஆந் திகதிய 751/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் 4ஏ பக்கத்தில் காட்டப்பட்டுள்ள கட்டளையின் முதலாவது அட்டவணையின் அனைத்து சொற்கள் மற்றும் எண்களுக்குப் பதிலாக பின்வரும் சொற்கள் மற்றும் எண்களைப் பதிலீடு செய்தல் வேண்டும்.

"(ஏ) ஏதேனும் வர்த்தகமொன்றின் மொத்த விற்பனவு தொடர்பாக -

- இங்கு அட்டவணையின் IX பிரிவிற்கு .......................... 1 வீதம்
- இங்கு அட்டவணையின் IX அ பிரிவிற்கு .......................... 5 வீதம்"

(2) இங்கு அட்டவணையின் IX அ பிரிவின் இறுதியில் பின்வருவனவற்றைச் சேர்ப்பதன் மூலம்

"IXஅ பிரிவு (5%)

மதுபானம் மற்றும் சிகரட்டுகளை மொத்த அல்லது சில்லறை அடிப்படையில் விற்பனை செய்யும் (உற்பத்தியாளர்கள் தவிர்ந்த) வர்த்தகம்."

மகிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.
(நிதி, திட்டமிடல் அமைச்சர்.)

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 1,*
*2006 திசெம்பர் 29.*

*1-287*